முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 18.11.2025

O.S No. 74/2024

வா.சா.2- மூத்தையா மூப்பனார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

வழக்கு பட்டிகை சொத்து பரம்பரை சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரி. எவ்வாறு பாத்தியம் என்றால் எனது அப்பாவிற்கு பூர்விக பாத்தியம். எனது அப்பா பெயர் சொக்கலிங்கம் ஆகும். நான் எனது சகோதரருடன் பாகபிரிவினை செய்த ஆண்டு என்ன என்றால் உத்தேசமாக 1976 ஆகும். நான் செய்த பாக பிரிவினை பத்திரத்தில் எங்களுக்கு எவ்வாறு சொத்து பாத்தியம் என்ற விவரத்தை சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். தாய் பத்திரத்தை சொல்லியுள்ளோமாஎன்றால் இல்லை. தாய் பத்திரமே கிடையாது.

பாக பிரிவினை பத்திரத்தில் பொதுவாக பாத்தியப்பட்டது, உரிமைப்பட்டது என்று சொல்லயிருப்பதில் யாருக்கு பொது என்றால் சுப்ரமணியத்திற்கு பொதுவான சொத்தாகும். வாதியின் தகப்பனாருக்கு ஏ பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது. ஏ பட்டிகை சொத்தில் கோட்டார் ஊர்வகை மனை சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு விடுதலை பத்திரம் மூலமாக வழக்கு சொத்து பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2017 ல் ஒகி புயலுக்கு முன்பாக ஒலைகுடிசை போட்டதாக சொல்லியிருப்பது தவறு என்றாலும் பிரதிவாதி 1998 -லேயே சாமில் நடத்தி வருகிறார் என்றாலும் அவர் அதற்கான செட் அமைத்துள்ளார் என்றாலும் சரிதான்.